FM

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2023

10 - ஆம் வகுப்பு

## சமூக அறிவியல்

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 7 X 1 = 7

1. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந் தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது? அ) சீனா ஆ) ஜப்பான் இ) கொரியா ஈ) மங்கோலியா
2. ஹிட்லர் எழுதிய நூலின் பெயர் ..........
   அ) குலாம்கிரி ஆ) அகிலதிரட்டு இ) மெயின்காம்ப் ஈ) திருவருட்பா
3. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?
   அ) கவாசாகி ஆ) டோக்கியோ இ) ஹிரோஷிமா ஈ) நாகசகி
4. சேஷாசலம் உயிர்க்கோள பெட்டகம் அமைந்துள்ள மாநிலம் ...............
   அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப்பிரதேசம் இ) மத்தியபிரதேசம் ஈ) கர்நாடகா
5. உலகிலேயே மிக நீளமான அணை .........
   அ) மேட்டூர் அணை ஆ) கோசி அணை இ) ஹிராகுட் அணை ஈ) பக்ரா நங்கல் அணை
6. அமைச்சர்கள் குழு ஒட்டு மொத்தமாக இதற்கு பொறுப்புடையவர்களாவர்
   அ) குடியரசுத் தலைவர் ஆ) மக்களவை இ) பிரதம அமைச்சர் ஈ) மாநிலங்களவை
7. இந்தியா எப்போது டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது?
   அ) 1984 ஆ) 1976 இ) 1950 ஈ) 1994

**II எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண். 14 கட்டாயமாக விடையளிக்கவும்.** 5 X 2 = 10

8. பொருளாதார பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?
9. மியூனிக் உடன்படிக்கை - குறிப்பு தருக.
10. இந்தியாவில் அதிக மழைப்பெறும் பகுதிகளைக் குறிப்பிடுக.
11. இந்தியாவில் காணப்படும் மண்வகைகளின் பெயரினை எழுதுக.
12. இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
13. உலக மயமாக்கலின் நேர்மறையான தாக்கங்கள் இரண்டினை எழுதுக.
14. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

**III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண். 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 5 X 5 = 25

15. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
16. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.
17. **வேறுபடுத்துக.** அ) ராபி பருவம் மற்றும் காரிப் பருவம் ஆ) வண்டல் மண் மற்றும் கரிசல்மண் **காரணம் கூறுக.** வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு.
18. இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?
19. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துகளை விவரி.
20. கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
    1930 முதல் 1950 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.
21. **உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்க.**
    1) இங்கிலாந்து 2) பிரான்ஸ் 3) ஹிரோஷிமா 4) மாஸ்கோ 5) சான்பிரான்சிஸ்கோ

**IV குறிப்பு : பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 8 X 1 = 8

22. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை கண்டறியவும்.
    ***(அல்லது)*** **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்.** 1) ஆரவல்லி 2) தக்காண பீடபூமி 3) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை 4) பன்னா உயிர்கோள பெட்டகம் 5) மலைக்காடுகள் 6) வண்டல் மண் அதிகம் காணப்படும் பகுதி 7) தேயிலை விளையும் பகுதி 8) கோதாவரி டெல்டா பகுதி

FM 10 Soci. Single Page

www.Padasalai.Net

-E.VIKRAM (M.Sc.,B.Ed(Mathematics))
Sri Rajalakshmi Tuition Centre.,Arni -632301.,Tiruvannamalai district.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com